செ.வெ.எண்: 17 நாள்: 05.02.2017

**புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் ரூ.27.2 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய அலுவலக கட்டுமானப்பணிகளை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு.**

புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் 04.02.2017 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின் போது அண்ணா பண்ணையில் இயங்கி வரும் உயிர் உரங்கள் உற்பத்தி மையம், நுண்ணுயிர் உரம் தயாரிப்பு, மண் பரிசோதனை ஆய்வகம், நுண்ணூட்ட உள்ளடக்கம், உயிரி உரம், மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம், நுண்ணூட்ட கலவை மையம், மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம் உட்பட வேளாண் சார்ந்த பல்வேறு ஆய்வகங்களை பார்வையிட்ட மாண்புமிகு அமைச்சர்கள் இதன் செயல்பாடுகள் குறித்து பேராசிரியர்களிடம் கேட்டறிந்தனர்.

மேலும் தற்பொழுது இயங்கி வரும் வேளாண்மைக் கல்லூரிக்கு அருகில் ரூ.27.2 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் கல்லூரி அலுவலகம் மற்றும் விடுதியினை நேரில் பார்வையிட்ட மாண்புமிகு அமைச்சர்கள் பணியினை விரைந்து முடித்திட செயற்பொறியாளர் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடம் அறிவுறுத்தினார்கள்.

முன்னதாக வேளாண் கல்லூரி மாணவ, மாணவியர்களிடையேயான கலந்துரையாடல் நிகழ்ச்சிக்குப்பின் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு தொடங்கப்பட்ட இக்கல்லூரியானது கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாணவர்கள் இங்கு பயின்று வருகின்றனர். மேலும் இங்கு பயிலும் மாணவர்கள் வேளாண்மை தொடர்பான பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் பருவமழை பொய்த்து போனதால் சம்பா சாகுபடி செய்த விவசாயிகளின் நிலங்கள் பாதிக்கப்பட்டு உள்ளது. இதற்கு மாற்றாக சிறுதானியங்கள், உளுந்து, துவரை, அவரை உட்பட பல்வேறு பயிர் வகைகள் நடவு செய்ய துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியால் பாதிப்புக்குள்ளான விவசாயிகளின் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்க பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தை பொறுத்தவரை வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் ரூ.39,525 கோடி மத்திய அரசிடம் கோரப்பட்டுள்ளது. மத்தியக்குழு அண்மையில் ஆய்வு செய்து சென்றுள்ள நிலையில் உரிய நிதி கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. அவ்வாறு மத்திய அரசு நிதி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டால் அதற்காக காத்திருக்காமல் கடந்த 2012-13ல் அளித்ததை போல் தமிழகஅரசானது விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் திரு.இரத்தினசபாபதி, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் (கோயம்புத்தூர்) துணை வேந்தர் முனைவர்.கு.ராமசாமி, வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர்.செங்குட்டுவன், வேளாண்மை துணை இயக்குநர் திரு.இரா.அண்ணாமலை, வேளாண்மை பொறியியல் துறை தலைமைப்பொறியாளர் திரு.தெய்வேந்திரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.அருணாச்சலம், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் திருமதி.ருக்மணி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.அன்பழகன், கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ஆர்.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.சாம்பசிவம், திரு.எஸ்.வி.எஸ்.ஜெயக்குமார், வேளாண்மைக்கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**